# திருமங்கையாழ்வார் பாசுரங்களில் சரணாகதி தத்துவம்

முனைவர்சு.பரணி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம்மனையியல்மற்றும்மகளிர்உயர்கல்விநிறுவனம்
கோயம்புத்தூர்.

DrS.Bharani
Assistant Professor, Department of Tamil,
Avinashilingam Institute for Home Science and Higher Education for Women,
Coimbatore - 43
**ORCID:** https://orcid.org/0000-0002-7736-1205

ஆய்வுச்சுருக்கம்

ஆத்மாதன்னை இறைவனிடம் முழுமையாக ஒப்படைக்கின்றதனைச் சரணாகதி என்கிறோம் . ஆத்மா, இறைவனை அடையமுடியாமல் தன்னை பற்றியுள்ள ஐம்பொறி ஆசை, பிறவிபிணி ஆகிய பயத்தின்காரணமாக சரணடைகின்ற ஆத்மாவின் நிலையை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

திறவுச்சொற்கள்

சரணாகதி – ஆத்மா - இறைவன்–பயவுணர்வு- உயிர்க்கொலை

முன்னுரை

இறைவனிடம் அனைத்து உயிர்களும் சரண் அடைகின்றன . இறை நெறியில் நின்ற ஆன்மாவிற்குக்கர்மம் ; ஞானம், பக்தியோகங்களை முழுமையாக கடைபிடிக்க இயலாமல் போகின்றது . ஆதலால், தான் செய்கின்ற அனைத்து செயல்களுக்கும் இறைவனேகாரணம் என எண்ணிய ஆத்மாஅவனின்பாதாரவிந்தங்களில் சரண்புகுந்து தன்னைப்பின் தொடர்ந்து வரும் ஊழில் இருந்துதற்காத்து கொள்கிறது . ஆழ்வார்கள் அனைவரும் திருமாலிடம் சரணடைந்தவர்கள் என்றாலும் நீலனின் சரணடைதல் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

சரணாகதிஅல்லதுபிரபத்தி

ஆத்மாதன்னை முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்தல் சரணாகதி ஆகும் . அதில் சிறுசஞ்சலம் கூட இருக்கக்கூடாது. தனக்கு நிகழும் அனைத்தையும் பரம் பொருள்பார்த்துக் கொள்ளும் என்று ஆத்மாமுழுமையாக நம்புதல் வேண்டும் . தான் கேட்ட, பார்த்த, உணர்ந்த அனைத்து தத்துவங்களையும் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். ஆத்மாவின் முழுமையான அர்ப்பணிப்பே சரணாகதி ஆகும். வைணவபக்திநெறியில்மூன்றுவழிகள்உள்ளன. அவையாவன:கர்மம்; ஞானம்; பக்திஆகியனவாகும். இந்த மூன்று நெறிகளைக்காட்டிலும் உயர்ந்ததும் சிறந்ததுமானவழி சரணாகதி ஆகும் . இறைவனிடம் தான் முழுமையாக சரண் கொடுத்து விட்டால் அவன் நமக்குரிய பாவத்திலிருந்து விடுவிப்பான் என்பதைப் பகவத்கீதையில் , கிருஷ்ணர் அர்ஜுனனிடம் ஏபார்த்தா உன்னுடையதர் மங்கள் , கடமைகள் அனைத்தையும் என்னிடத்தில் அர்ப்பணம் செய்து விட்டு சர்வவல்லமை பொருந்திய எல்லாவற்றுக்கும் ஆதாரமானபரம் பொருளான என்னொருவனைசரண் அடைவாயாக : நான் உன்னை அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன் . ஆகவே, வருந்தாதே என்பதனை,

ஸர்வதர்மாந்பரித்யஜ்யமாம்ஏகம்ஸரணம்வ்ரஜ
அஹம்த்வாஸ்வபாபேப்யோமோக்ஷியிஷ்யாமி
(பகவத்கீதை, ஸ்லோகம் 18 – 66)

என்றதத்துவத்தைக்கிருஷ்ணரேபோதிக்கின்றார்.தன்னிடம்சரண்அடைந்தஆத்மாக்களின்எட்டுவிதமானபாவங்களைஅ னாதிகாலம்தொட்டுஇன்றுவரைதீவினைகளைப்பஞ்சுபொதியில் இட்டதீ போன்று அழித்துவிடுகிறேன் எனசரமஸ்லோகத்தில் கூறுகின்றார் . பக்திமார்க்கத்தைக்கர்மம், ஞானம், பக்தி எனபடிப் படியாகத்தான் பின்பற்ற முடியும. எடுத்த எடுப்பிலேயேயோகம் கடைபிடித்தல் என்பது சிரமமாகும் . ஆனால், பிரபத்தி ஆகியசரணாகதியை உடனடியாக எவரும் கடைபிடிக்கலாம் . ஆத்மாத்மீயஸ்வரூபத்தையும் அவற்றைக்காப்பாற்றும் பொறுப்பையும் காப்பாற்றுவதால் வரும் பலனைபயனையும் எம் பெருமானிடம் சமர்ப்பணம் செய்வது , இதுவேநியாசம், தியாகம், சரணாகதி, பிரபத்தி(ந.சுப்புரெட்டியர், வைணவச்செல்வம், ப -365) என்று பல சொற்கள் மூலம் சொல்லப்படுகிறது என்று

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

இராகவன்விளக்குகின்றார். இம்மாதவவேள்விக்கு இறைப்பொருளே உத்தேச்யம் ஆகும் . அதாவது இறைப்பொருளின் பொருட்டே இறைப்பொருளுக்கு உயிர் பொருளை ஆவியாக
இடும்ஞானப்பெருவேள்வியஉபாயம்என்னும்மாதவம்(நா. சுப்புரெட்டியார், வைணவச்செல்வம்பக்கம் 201-222)
ஆகும்என்றுகேசவஐயர்விளக்கம்தருகிறார்.
பரமாத்மாவிற்கும்சீவாத்மாவிற்கும்உள்ளஇடைவெளியைசரணாகதியேஎளிதில்இட்டுநிரப்புகிறது.இதனை,
ஓதம்இரண்டையிசைத்தருளாலுதவும்திருமால்
பாதம்இரண்டும்சரணெனப்பற்றிநம்பங்கயத்தாள்
நாதனைநண்ணிநலந்திகழ்நாட்டில்அடிமையெல்லாம்
கோதில்உணர்த்திஉடன்கொளுமாறுகுறித்தனவே
(வேதாந்ததேசிகர், தேசிகப்பிரபந்தம் 74)
என்றபாடல்சரணாகதியின்தன்மையையும்பரமாத்மாவின்கருணையையும்எடுத்துரைக்கின்றது.திருமங்கையாழ்வார்நடப்பவைஎல்லம்நாராயணன்செயல்எனமுழுமையாகஇறைவனிடம்சரணடைந்துதமக்குஅருள்புரியுமாறுவேண்டுகிறார்

பற்றேலொன்றுமிலேன்பாவமேசெய்துபாவியானேன்
மற்றேலொன்றறியேன்மாயனே!எங்கள்மாதவனே
கற்றேன்பாய்ந்தொழுகும்கமலச்சுனைவேங்கடவா
அற்றேன்வந்தடைந்தேன்அடியேனையாட்கொண்டருளே
(பெரிய திருமொழி.1036)

என்றபாடல்உணர்த்துகிறது.மேலும்,
ஒப்பிலேனாகிலும்நின்னடைந்தேன்ஆனைக்குநீயருள்செய்தமையால்
(பெரியாழ்வார் திருமொழி.423)

என்றபாடல்வரிபெரியாழ்வார்சரணடைந்ததன்மையையெடுத்துரைக்கின்றது.
திருமங்கையாழ்வார்பாசுரங்களில்சரணடைதல்
உலகில்ஜீவாத்மாக்கள்படும்துன்பத்தினையும்துயரத்தினையும்தன்மேல்ஏற்றிப்படுவதுபக்திஇலக்கியங்களின்மரபு.அவ்வகையில்,
திருமங்கையாழ்வாரும்ஜீவாத்மாவிற்குஏற்படும்பயத்தின்காரணமாகஇறைவனைச்சரண்டைவதாகதமதுபாசுரங்களில்பதிவுசெய்கின்றார்.

ஜீவாத்மாவின்பயம் → ஐம்பொறிக்குஅஞ்சுதல்
→ உயிர்க்கொலை
→ பிறவிப்பிணி
→ எமதூதர்

ஆகியவனவாகும்.

ஐம்பொறிக்குஅஞ்சுதல்
ஜீவாத்மாமனிதஉடலுக்குள்கட்டுண்டுகிடக்கின்றது.அதுமனதின்வழியாகவேவாழ்கின்றது.சீவன்குடிகொண்டுள்ளகுடிலானதுஐம்பொறிகளும்உட்பட்டது.ஐம்பொறிகளும்மனிதனைஎந்தஇச்சைக்கும்இழுத்துச்செல்கின்றதோமனதும்காந்தம்கவர்ந்தஇரும்புத்துண்டுஎனஅதன்வழிசென்றுவிடும்.ஆதலால்,ஓர்இயந்திரியத்திற்குத்தப்பிப்பிழைப்பதுஅரிதுஎனும்பொழுதுஐம்பொறிகள்நெருங்கியிருந்துஎன்றும்ஓயாமல்அழைத்துநெருங்குவதால்அதற்குஅஞ்சிஉன்னைச்சரண்புகுந்தேன்என்கிறார்.

ஒருவருக்குஆற்றிஉய்யும்வகைஇன்றால்
உடனின்றுஐவர்என்னுள்புகுந்துஒழியாது
அருவிதின்றிடஅஞ்சிநின்அடைக்கலம்அடைந்தேன்
(பெரியதிருமொழி 1608)

சிறுமைக்கும்பெருமைக்கும்உள்புகுந்து
பொய்யாய்ஐவர்என்மெய்குடில்யேரிப்
போற்றிவாழ்ந்ததற்குஅஞ்சிநின்சரணடைந்தேன்
(பெரியதிருமொழி1610 )

.....ஐவர்
அறுத்துத்தின்றிடஅஞ்சிநின்அடைந்தேன்
(பெரியதிருமொழி1614)

என்றபாசுரவரிகளில்ஐம்புலன்களும்என்னைத்தவறாகவழியில் அழைத்துச்
செல்வதால்அதிலிருந்துதப்பித்துக்கொள்ளஇறைவாஉன்திருவடிகளில்சரணடைகின்றேன்என்கிறார்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

நலங்களாயநற்கலைகள்நாவிலும்நவின்றிலேன்,
புலன்களைந்தும்வென்றிலேன்பொறியிலேன்புனிதநின்
இலங்குபாதமன்றிமற்றொர்பற்றிலேனெம்மீசனே
(திருமழிசையாழ்வார், திருச்சந்தவிருத்தம் - 90)

என்றுபாடுகின்றார்.பஞ்சஇந்தியங்களைஅடக்கஇயலவில்லை.
ஐம்பொறிகளின்கட்டுப்பாட்டில்அகப்பட்டுதுன்புறுகிறேன்.ஆதலால்,உன்ஒளிமிக்கதிருவடிகளைத்தவிரவேறுபிழைக்கும்வழிஎனக்குஇல்லைஎன்றெண்ணிஉன்பாதத்தைச்சரணடைகின்றேன்என்கிறார்திருமழிசையாழ்வார்.

உயிர்க்கொலை

எந்தஉயிர்களையும்கொலைசெய்தல்பாவமாகும்.உயிர்களைக்கொலைசெய்தல்வேண்டாம்எனசமயங்களும்இலக்கியங்களும்எடுத்துரைக்கின்றன.ஆனாலும்,
எல்லாஇடங்களிலும்காரணம்இருந்தோஇல்லாமலோபலஉயிர்கள்கொலைசெய்யப்படுகின்றன.
அவ்வாறு,தான்செய்தஉயிர்க்கொலைக்குவருந்திஇனிமேல்தான்இத்தவற்றைச்செய்யக்கூடாதுஎனஇறைவனிடம்சரண்போகின்றவிதத்தினை,

கொன்றேன்பல்லுயிரைக்குறிக்கோள்ஒன்றுஇலாமையினால்
அன்றேவந்தடைந்தேன்அடியேனைஆட்கொண்டுஅருளே
(பெரியதிருமொழி1030)

என்றபாசுரம்குறிக்கோள்இல்லாமல்தான்உயிர்க்கொலைபுரிந்துவாழ்ந்ததனை
நினைத்துவருந்திஇறைவனைவந்தடைந்தேன்என்கிறார்.

பிறவிப்பிணி

நாம்செய்யும்நல்வினைதீவினைக்குஏற்பஇப்பிறவிப்பிணியானதுதொடர்ந்துவரும்.அப்பிணியைவேரறுக்கும்பொருட்டுஇறைவனைச்சரணடையும்பொழுதுஅதுஅழிந்துவிடும்.பலபிறவிகள்பிறந்தும்இறந்தும் மீண்டும்பிறந்தும்என்னால்இறைவனைஅடையஇயலவில்லை.
இப்பிறவியிலும்பலதுன்பங்களுக்குஆட்பட்டுவந்தடைந்துள்ளேன், என்னைஆட்கொள்வாயாகஇறைவாஎன்பதனை,

நோற்றோன்; பல்பிறவிநுன்னைக்காண்பதோர்ஆசையினால்
ஏற்றேன்இப்பிறப்பேஇடருற்றனான்எம்பெருமான் .....
ஆற்றின்வந்தடைந்தேன் (பெரியதிருமொழி1030)

என்றபாசுரம்வரிகள்பலஇன்னல்களுக்குஆட்பட்டுதுன்பப்பட்டுஉன்னையேகதிஎன்றுசரண்அடைந்துள்ளேன்என்னைஏற்றுக்கொள்வாயாகஎன்கிறார்.

எமதூதர்

உடலைவிட்டுஉயிர்பிரிந்தவுடன்உயிரைஎமலோகத்திற்குக்கொண்டுசெல்லஎமதூதர்வருவார்கள்.அவர்களின்வருகையானதுஎனக்குதுன்பத்தைதருகின்றது.தாலிகட்டியமனைவியைத்துறந்துபிறருடையபொருள்களையும்பிறருடையமனைவியையும்விரும்பியவர்களைஇறந்தபின்புஎமனதுஉறவுகள்பிடித்துக்கொண்டுபோய்துன்புறுத்துவார்கள்.
அவர்கள்செம்பினால்செய்தநெருப்புபற்றிஎரியும்பாவைதழுவுஎன்றுசொல்வார்கள்எனபயந்துஉன்னைவந்தடைந்தேன்.
இதனை,

வம்புலாங்கூந்தல்மனைவியைத்துறந்துபிறர்ப்பொருள்தாரஎன்றுஇவற்றை,
நம்பினார்இறந்தால்நமன்தமர்ப்பற்றிஏற்றிவைத்து, எரிழுகின்ற
செம்பினால்இயன்றபாவையைப்பாவீதழுவெனமொழிவதர்க்குஅஞ்சி,
நம்பனேவந்துந்திருவடியடைந்தேன்
(பெரியதிருமொழி1001)

என்றுபாசுரத்தில்பிறருடையபொருட்களைகவருவதால்இறந்தபின்புதன்னைஎமதூதர்கர்துன்புறுத்துவதனைநினைத்துஇப்பொழுதுஉன்னிடத்தில்சரணடைகின்றேன்என்கிறார்.மேலும்,

இடும்பையால்அடர்ப்புண்டுஇடுமினோதுற்றென்னு
இரந்தவர்க்குஇல்லையேயென்று,
நெடுஞ்சொலால்மறுத்தநீசனேன்அந்தோ
நினைக்கிலேன்வினைப்பயன்தன்னை,
கடுஞ்சொலார்க்கடியார்க்காலனார்தமரால்
படுவதோர்கொடுமிறைக்குஅஞ்சி,
நடுங்கிநான்வந்துந்திருவடியடைந்தேன்
(பெரியதிருமொழி 1002 )

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

என்றபாசுரம்வறுமையில்வாடிபிச்சைகேட்டவருக்குஇல்லைஎன்றுகூறியநீசனாகியநான்பலபாவங்களால்ஏற்படும்; பலனைநினைக்கவில்லை. ஆனாலும், எமதூதர்களின்கொடுமைக்குஅஞ்சிஉன்திருவடியைசரண்அடைகின்றேன். மேலும்,

காதலேமிகுத்துக்கண்டவாதிரிந்த
தொண்டனேன்நமன்தமர்செய்யும்,
வேதனைக்கொடுங்கிநடுங்கினேன்
வேலைவெண்டிரையலமரக்கடைந்த,
நாதனேவந்துன்திருவடியடைந்தேன்

(பெரியதிருமொழி 1000 )

என்றபாசுரவரிகள்நமனின்தூதர்களுக்குஅஞ்சிஇறைவனிம்சரணடைகின்றஆழ்வாரின்மனநிலையையெடுத்துரைக்கின்றது. மேலும், திருமழிசையாழிவார்,

கூறமும்சாராகொடுவினையும்சாரா,தீ
மாற்றமும்சாராவகையறிந்தேன்- ஆற்றங்
கரைக்கிடக்கும்கண்ணன்கடல்கிடக்கும், மாயன்
உரைக்கிடக்குமுள்ளத்தெனக்கு

(திருமழிசையாழ்வார், நான்முகன்திருவந்தாதி 50)

என்றபாசுரத்தின்வழிதிருமாலின்திருவடிகளைச்சரணடைந்தால்என்னைமரணபயம், கொடியபாவங்கள்,கெட்டவிசயங்கள்ஆகியவைஅணுகஇயலாதுஎன்கிறார்.

முடிவுரை

- ஜீவாத்மாஇறைவனிடம்தன்னைமுழுமையாகஒப்படைத்தலேசரணாகதிஆகும்.
- இறைவனைச்சரணடைகின்றஜீவாத்மாக்களின்எட்டுவிதமானபாவங்களைஅனாதிகாலம்தொட்டுதீயில்அழியும்பஞ்சுபோலஅழித்துவருவதாககீதையிலேகிருஷ்ணர்கூறியுள்ளார்.
- ஜீவாத்மாவிடம்குடிகொண்டுள்ளஐம்புலஆசை, தொடர்பிறவிப்பிணியாலும், எமதூதர்களின்துன்புறுத்தலால்ஏற்படும்பயத்தின்காரணமாகவும், தன்னைபாதுகாத்துக்கொள்ளவேண்டியும், ஜீவாத்மாஇறைவனிடம்சரணடைகின்றதுஎனதிருமங்கையாழ்வார்பதிவுசெய்கின்றார்.

மேற்கோள் நூல்கள்

புத்தகங்கள்

[1] சுப்புரெட்டியர்(1985),வைணவச்செல்வம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
[2] நாராயணவேலுப்பிள்ளை(2000), நாலாயிரதிவ்யப்பிரபந்தம்,முல்லை நிலையம்,சென்னை.
[3] பகவத்கீதை, ஸ்ரீராமகிருஷ்ணதபோவனம்,திருப்பாய்த்துறை,திருச்சி.
[4] ஆர்.கிருஷ்ணசாமி. சரணாகதி, விகடன்பதிப்பகம், சென்னை.
[5] சி.எஸ். தேவ்நாத், சரணாகதித்தத்துவவிளக்கம், விஜயாபதிப்பகம், சென்னை.
[6] வேதாந்ததேசிகர், தேசிகப்ரபந்தம் , வித்தியாவிவேகஸ்தாநிதிஅச்சுக்கூடம் ,சென்னை.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்